NB edu.newsbundles.com

# அனைவருக்கும் கல்வி இயக்கம்,

## இரண்டாம் வகுப்பு

## தமிழ்

**<u>வாசித்தல் திறன்</u>**

- அறம் செய்ய விரும்பு
- இந்தியா நமது தாய்நாடு
- புகழ் ஒன்றே காலத்தால் அழியாதது.
- நாளை உலகம் நம் கையில்
- பள்ளியில் ஆண்டு விழா நடந்தது.
- பசு பால் தரும்.
- வண்ண வண்ண மிட்டாய்கள்.
- அணில் துள்ளி ஓடியது.
- நம் தாய் மொழி தமிழ்.
- குழந்தை சிரித்தது.
- ஓடி விளையாடு பாப்பா
- இது எங்கள் பள்ளிக் கூடம்
- ஈரக்காற்று வீசியது
- பள்ளியில் மணி ஒலித்தது
- யாழ் பழங்கால இசைக்கருவி
- பழச்சாறு சத்துமிக்கது.
- குதிரை விரைவாக ஓடுகிறது.
- பலாப்பழம் இனிக்கும்.

NB edu.newsbundles.com

## எழுதுதல் திறன்

- மயில் ஆடும்
- நாய் வீட்டு விலங்கு
- கிளி பச்சை நிறம்
- யானை பெரிய விலங்கு
- செய்யும் தொழிலே தெய்வம்
- பூக்களைப் பறிக்காதீர்.
- என் பெயர் ------------------
- உழைப்பே உயர்வு.
- சிந்தித்து  செயல்படு
- அம்மா இங்கே வா வா
- இது என் பள்ளி
- என் நண்பனைப் பார்த்தேன்
- மிதி வண்டி
- வெள்ளைப் பசு
- வண்ணத்துப் பூச்சி அழகானது
- பாகற்காய் உடலுக்கு நல்லது
- மயில்தோகை மிகவும் அழகானது.
- கருவேப்பிலை உடலுக்கு நல்லது
- நத்தை மெதுவாக நகரும்
- நெசவாளர் துணி நெய்கிறார்.

### மூன்றாம்  வகுப்பு

## வாசித்தல் திறன்

- நாம் பள்ளியைத் தூய்மையாக வைக்கவேண்டும்.
- நான் நேற்று என் நண்பனைக் காணச்சென்றேன்.
- ஒரு காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது.
- வானத்தில் மேகங்கள் திரண்டன

- தெருக்களில் மழைநீர் ஓடியது
- எறும்பு ஊர்ந்து செல்லும்
- பதறாத காரியம் சிதறாது
- ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு
- தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்
- பழகப் பழகப் பாலும் புளிக்கும்
- அவர் வயதில் இளையவர்
- இளைஞர்களால் நாடு முன்னேறும்
- சிவப்பு விளக்கு ஒளிர்ந்தால் பேருந்து நின்று விடும்
- நீண்ட காலம் போர் நடந்தது.
- ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தனர்.
- மக்கள் பணியே மகேசன் பணி
- வண்ணத்துப்பூச்சி அழகாகப் பறக்கிறது.
- பாரதிதாசன் புதுவையில் பிறந்தார்.
- நான் மூன்றாம் வகுப்பு படிக்கிறேன்.
- காலைவேளை பள்ளி மணி ஒலித்தது
- மலைகளின் அரசி நீலகிரி
- பால்நிலா அழகாக உள்ளது
- ஆற்றில் நீர் சல சல என ஓடியது
- உன்னுடைய பிறந்த நாள் எது ?

**<u>எழுதுதல் திறன்</u>**

- நண்பகல் நேரம் வந்தது.
- காடுகளைப் பாதுகாக்க வேண்டும்.
- மயில் தோகை விரித்து ஆடும்.
- ஆற்றில் வெள்ளம் ஓடுகிறது.
- மீன் துள்ளிக் குதிக்கிறது.
- அரசர் நகர்வலம் வந்தார்.
- பாலுவின் நண்பன் வேலு.

NB edu.newsbundles.com

- தோசைக்கு சர்க்கரை கொண்டு வாருங்கள்
- ஆண் மயில் தோகை விரித்து ஆடும்
- நத்தை மெதுவாக நகரும்
- அடர்ந்த காட்டில் குளம் ஒன்று இருந்தது
- குரைக்கிற நாய் கடிக்காது
- இனம் இனத்தோடு சேரும்
- பணம் பத்தும் செய்யும்
- அணில் கிளைக்குக் கிளை தாவும்.
- எனக்கு பள்ளி செல்ல ஆசை.
- நல்ல நூல்களை தேடிப்படி
- மலையெங்கும் பசுமையான தோற்றம்
- இரவு வானில் என்னென்ன காண்பாய் ?
- நெற்பயிர்கள் காற்றில் அழகாய் அசைந்தன.

## நான்காம் வகுப்பு

### வாசித்தல் திறன்

- இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக பல போராட்டங்களில் காந்தியடிகள் ஈடுபட்டார்.
- உடற்பயிற்சி நம் உடலையும், மனதையும் வலிமையாக வைத்திருக்க உதவுகிறது.
- எல்லோரும் சேமிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்.
- சாலை விதிகளை அனுசரித்து நடப்பது ஒவ்வொரு குடிமகனின் தலையாய கடமையாகும்.
- ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளிடம் இருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.
- வெற்றியை அடைவதற்கு தடைகள் பலவற்றைக் கடந்தே தீர வேண்டும்.
- மேலும் ஒரு மைல் நடப்பது கடினமாகவுமிருக்கலாம். ஆனாலும் நாம் இருக்கும் வசதியான வட்டத்தை விட்டு வெளியே வர வேண்டும்.
- யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தார் ஒருவர் அவர் தாம் உ. வே. சாமிநாதர்.

NB edu.newsbundles.com

- மற்றவர்களைவிட துல்லியமாகத் திட்டமிடுங்கள். திட்ட மிட்டதை மற்றவர்களைவிடக் கடுமையாகப் பாடுபட செயல்படுத்துங்கள்.
- பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதில் குழந்தைகளைப் பணிக்கு அனுப்பக் கூடாது.
- ஒரு நாட்டில் கிராமங்கள் வளர்ச்சியடைந்தால் தான் அந்நாடு வளம் பெறும்.
- காடுகளே மழைக்கு முக்கிய காரணமாக விளங்குகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.
- அன்பு, மனித நேயம், அகிம்சை, தியாகம் என்பதற்கு எடுத்துக்காட்டாக காந்தியடிகள் விளங்கினார்.
- நாடு முன்னேற வேண்டுமானால் இளைஞர்களின் செயல் வேகம் தேவை.
- வேங்கை நாடு ஒரு அழகான நாடு. அந்நாட்டை வேங்கை மன்னன் ஆண்டு வந்தார்.
- தாயிற்சிறந்த கோயிலும் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
- காடுகள் அழிவதை தடுத்து மழை வளம் பெருக அனைவரும் பாடுபடுவோம்..

## எழுதுதல் திறன்

- போட்டி நிறைந்த இந்த உலகில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை.
- ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் இளைஞர்களின் செயல் வேகம் தேவை
- இளமையைக் காட்டிலும் நோயற்ற வாழ்வே சிறந்தது.
- தொப்புள் கொடி உறவுகள் அறுந்து போகாமல் காப்பது தாய்மொழி மாத்திரமே.
- நன்மை செய்தவர்களை ஊர் உலகம் போற்றும்.
- வெற்றி என்பது இறுதியில் இல்லை. அது ஒவ்வொரு அடியிலும் உள்ளது.
- நமது எதிர்மறை மனப்போக்குதான். நமது வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடைக்கல்.
- உங்களிடம் எண்ணற்ற திறன்கள் இருக்கின்றன. உங்களது நேர்மறை மனப்போக்கு தான் உங்களை உயர்வுக்கு அழைத்துச் செல்லும்.
- உங்களது கடந்த கால வெற்றி உங்களுக்கு நம்பிக்கையை அளிக்கும். அந்த நம்பிக்கை தான் மேலும் வெற்றி பெற உதவும்.
- நேர்மறை சிந்தனையுடையவர்களுடன் பழகினால், உங்களுக்கு நல்ல சிந்தனைகள் வரும். தீயவர்களின் நட்பு நாளடைவில் நமது போக்கைச் சிதறடித்து விடும்.

NB edu.newsbundles.com

- ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அதற்கு தரமான கல்வி அவசியம்.
- தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள் உலகப் புகழ் பெற்றவை.
- மழைபெய்வதை அதிகரிக்க என்ன செய்யலாம் ?
- நாம் பிறருக்குச் செய்யும் தீங்கு பின்னர் நம்மையே வந்து சேரும்.

## ஐந்தாம் வகுப்பு

### வாசித்தல் திறன்

- தமிழகம் தந்த தவப்புதல்வர்களுள் ஒருவர் நம் இந்திய நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள்.
- வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து இந்திய மக்களின் உயர்வுக்கு அன்னை தெரசா அவர்கள் பாடுபட்டார்.
- உள்ளூர் செய்திகள் முதல் உலகச்செய்திகள் வரை அனைத்தையும் நாம் வீட்டிற்கே கொண்டு வந்து தருவது செய்தித்தாள்கள் என்றால் அது மிகையாகாது.
- மக்களை மக்களால் தேர்ந்தேடுக்கப்பட்டவரே ஆட்சி செய்யும் முறையே ஜனநாயகம்.
- இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு.
- அறிவியல் என்பது நம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்டது.
- நாம் அறிவியலையும், அதன் கண்டுபிடிப்புகளையும் பயன்படுத்தி வருகிறோம்.
- நாட்டில் அறம் பெருக வேண்டும். உண்மை திறன் பெற வேண்டும். பருவமழை பொழிந்து பயிர்கள் செழித்து வளர வேண்டும். மேன்மை பொருந்திய கலைகளெல்லாம் வளர வேண்டும்
- சிறகடித்து விண்ணில் பறக்கிறேன். மேலிருந்து பார்க்கிறேன். ஆ மனிதர்கள் சிற்றெறும்புகளாய் காட்சி அளிக்கிறார்கள். வீடுகள் சின்னஞ்சிறு பெட்டிகளாய் சாலைகள் கருங்கோடுகளாய்த் தெரிகின்றன.
- அதிகாலையில் கோழி கூவும். கதிரவன் உதயமாகும்பொழுது நாம் கண் விழிக்க வேண்டும். அதுவே மிகச் சிறந்த பழக்கமாகும்.
- நீர் இல்லாமல் உலகில் எந்த உயிரும் வாழ இயலாது. நீருக்குக் காரணமான மழை பெய்யாவிட்டால் பசியால் ஒழுக்கமும் இல்லாமல் போய்விடும்.

NB edu.newsbundles.com

- தமிழர்களிடம் தமிழிலிலேயே பேச வேண்டும். நம் எழுத்திலும், பேச்சிலும் தமிழ் மணம் கமழ வேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்னும் நிலை மலரப் பாடுபட வேண்டும்.
- சிறந்த ஆசிரியர் என்பவர் மாணவர்களிடத்தில், நண்பர்களாகவும் தத்துவ ஞானியாகவும், வழிகாட்டியாகவும் இருப்பார்.

## எழுதுதல் திறன்

- திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.
- திருக்குறள் முப்பால் என்னும் பெயரால் குறிக்கப்படுகிறது.
- இணையம் இன்றளவில் மிகப்பெரிய தகவல் தொடர்பு சாதனமாகத் திகழ்கிறது.
- கல்வித்துறையில் மாணவர்களுக்குத் தேவையான தகவல்கள் கிடைக்கின்றன.
- சுத்தம் சுகம் தரும் என்பது முதுமொழி. நம் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பது நமக்கு நன்மை தரும்.
- நல்ல காற்றையும், மழையையும், உணவையும் தந்து மனிதர்களை வாழ வைக்கும் காடுகளைப் பாதுகாத்தல் வேண்டும்.
- தை பிறந்தால் வழி பிறக்கும் என்கிற நம்பிக்கைக்கேற்ப ஒவ்வொரு தமிழரும் கொண்டாடும் தமிழர் திருநாளே பொங்கல் திருநாள்.
- சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கடைபிடிப்போம்.
- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- முயற்சி செல்வத்தை மேலும் பெருக்கும்.
- நாக்கால் இனிப்புக்கும், கசப்புக்கும் உள்ள வேறுபாட்டை உணர முடியும்.
- அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கு மட்டும் உரியது என்று எண்ணுவார். அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவார்.
- குடையைப் பிடித்துக் கொண்டிருந்தால், வானத்திலுள்ள சூரியனைக் கண்களால் காணமுடியாது. வசதிகளிடையிலேயே வாழ்க்கையைக் கழித்தால், வெற்றிகளைக் காண முடியாது.
- காலையில் எழுந்தவுடன் உங்கள் அறையிலேயே சிறிது நேரம் யோகா அல்லது தியானம் பேன்றவற்றில் ஈடுபடுங்கள்.

NB edu.newsbundles.com

- வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும்போது உங்கள் கவனம் முழுவதும் அவர் சொல்வதைக் கேட்பதிலேயே இருக்க வேண்டும்.
- செய்கின்ற செயலில் உங்களை கவனத்தோடு முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும்போது நீங்கள் அதிகமாக பரிணமிக்கிறீர்கள்.

## ஆறாம் வகுப்பு

**வாசித்தல் திறன்**

- வட இந்தியாவில் ஏழைகளின் எளிய பானமாகப் புளி நீரில் வெல்லம் போட்டு பருகுவார்கள். விழாக் காலங்களில் தமிழ் நாட்டிலும் புளியம்பழ சர்பத்தில் ரோஜா பூ போட்டும் வழங்குவார்கள்.
- கழிவுப்பொருள் மேலாண்மையைப் பற்றிய உயர் பட்டப் படிப்பினைப் பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தலாம். படிக்கும் மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கலாம்.
- வேகமாக மாறிவரும் பொருளாதாரப் பின்னணியில் பழைய கட்டடங்கள் புதிய கட்டடங்களாக உருமாறி வருகின்றன. ஆனால் இடுபாடுகள் அதிகம் சேருகின்றன. அவற்றையெல்லாம் ஒரு பொது இடத்தில் சேகரிக்க முயற்சிக்கலாம்.
- பாரதிதாசன் எதையும் ஆவேசத்தோடும், உணர்ச்சியோடும் பாடுபவர். கவிஞரின் சிந்தைனையும், மொழியும் வாழ்க்கையை விரிவாக்குவன.
- அன்பு செய்வது தான் உடம்பில் உயிர் இருப்பதற்கு அடையாளம். அன்பில்லாதவருடைய உடம்பு வெறும் தோலால் மூடப்பட்ட எலும்பு தான். அங்கு உயிர் இல்லை.
- ஒன்று கூடி வாழும் பண்பு சாதாரண காக்கைகளிடம் (சாம்பல் நிறக் கழுத்துள்ளவை) தான் உள்ளது. அண்டங்காக்கைகளிடம் அந்த பண்பு இல்லை.
- நூறு கோடிக்கு மேல் மக்கள் வசிக்கும் நம் நாட்டில் நம்முடன் போட்டி போட வேண்டிய பரிதாப நிலையில் விலங்கினங்கள் இருக்கின்றன.
- இது அடுக்குமா நண்பர்களே, முப்பது கோடி முகமுடையாள் என்று அன்று இந்தியாவைக் குறிப்பிட்டான் பாரதி. இன்று நூற்றுப் பதினைந்து கோடி முகமுடையாளாக இந்தியா ஆகி உள்ளது.
- அன்பு அறத்தை மட்டும் சார்ந்தது அல்ல. வீரத்திற்கும் அன்பு தான் துணை. ஆகவே அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துவோம்.

NB edu.newsbundles.com

- என் பெயர் புகழேந்தி. என் ஊர் தஞ்சாவூர். நான் ஆறாம் வகுப்பு படிக்கிறேன். எனக்கு கபடி விளையாடப் பிடிக்கும்.
- திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் எனும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
- தஞ்சை பெரிய கோயில் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து நிமிர்ந்து நிற்கிறது. இதன் சிறப்பை தஞ்சாவூர் சென்றால் மேலும் தெரிந்து கொள்ளலாம்.
- சிறு வயதிலிருந்தே மாணவர்கள் நல்ல பழக்க வழக்கங்களையும், பண்புகளையும் பெற்றிருந்தால் சமூகத்தில் நல்ல குடிமக்களாகப் போற்றப்படுவார்கள்.

## எழுதுதல் திறன்

- உலகில் இன்று வழங்கும் மொழிகள் தோன்றுவதற்கு முன்பாகவே எண்ணற்ற இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டதாக விளங்கியது தமிழ்மொழி.
- எல்லா மொழிகளும் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும். ஆனால் தமிழ் அவற்றுடன் சேர்த்து வாழ்வியலுக்கான பொருள் இலக்கணத்தையும் கூறுகிறது. அதனையும் அகம், புறம் என இருவகையாகப் பகுத்துள்ளன.
- ஒரு ஏரியானாலும், குளமானாலும், சூழல் கூட்டமைப்பிற்கான எல்லா காரணிகளையும் பெற்றிருப்பதால், இவை ஒரு தன்னிறைவு பெற்று அலகாகச் செயல்படமுடிகிறது.
- பிழை இல்லாமல் எழுதவேண்டும் என்பதற்காகவே உ.வே.சா வெவ்வேறு சுவடிகளை வைத்து பலமுறை ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே அவற்றை அச்சுக்கு அனுப்பினார். அவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளை வாசித்து நமக்காகத் தாளில் எழுதி, அச்சிட்டு புத்தகமாக வழங்கினார்.
- பாம்புகளைப் பார்க்கச் சென்ற இலக்கியா, பாம்புகள் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி பெட்டிகளை தட்டிக் கொண்டே வந்தாள்.
- வனவிலங்குகளை பாதுகாப்பதற்கு நாம் தேசிய பூங்கா மற்றும் வன உயிரி சரணாலயம் அமைத்தல் வேண்டும்.
- காடுகளை அழிப்பதைத் தடுக்க வேண்டும். விலங்குகளிலிருந்து பெறப்பட்ட தடை செய்யப்பட்ட பொருட்களை வாங்குதல் கூடாது.
- பழந்தமிழகத்தில் தமிழர்தம் வீரம் சிறக்க வில், வேல், வாள், ஈட்டி என போர்க்கருவிகளைத் தங்கள் பட்டறைகளில் நெஞ்சுரமிக்க மறவர் குல மக்களுக்கு வடித்துக் கொடுத்தனர்.

- எல்லோருக்கும் வாழ வேணடும் என்னும் ஏக்கம் இருக்கிறது. இந்த ஏக்கம் தனிமனித ஏக்கமாக இருக்கலாம். குழுவாக இணைந்து வாழ வேண்டும் என்னும் ஏக்கமாகவும் இருக்கலாம்.
- எங்கள் பள்ளியில் தண்ணீர் வசதி மிகவும் குறைவு. ஆனாலும் கை கழுவும் தண்ணீரைக்கூட வீணாக்காமல் தோட்டத்திற்குப் பாய்ச்சுகிறோம்.
- ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் நிமிர்ந்து நிற்கும் தஞ்சை பெரிய கோவிலைக் காண எனக்கு மிகவும் பெருமையாக இருக்கும்.
- பாம்பு தன் நாக்கை அடிக்கடி வெளியே நீட்டும் , சுற்றுப்புறத்தின் வாசனையை அறிந்து கொள்ளவே அவ்வாறு செய்கிறது.
- உலகின் மிகப்பழமையான நிலப்பகுதி குமரிக்கண்டம்.அந்நிலப்பகுதி கடல்கோளால் மூழ்கி விட்டது.

## ஏழாம் வகுப்பு

### வாசித்தல் திறன்

- நாம் பேசும் மொழியை , எழுதும் மொழியை முறையாகப் புரிந்து கொள்வதற்கு இலக்கணம் தேவை. நாம் பேசுவதும் எழுதுவதும் மற்றவர்க்கும் புரிய வேண்டும், நமக்கும் புரிய வேண்டும். அதற்குத்தான் இலக்கணம் தேவைப்படுகிறது.
- ஒரு கடலைப்பார்க்கிறோம், ஒரு மலையைப்பார்க்கிறோம், எப்படி வியக்கிறோம்! ஒரு மொழியைப் படிக்கும்போது அப்படி ஒரு வியப்பு ஏற்படும்.
- நாம் அனைவரும் மதம் , இனம், நாடு, மொழி ஆகிய வேறுபாடுகளின்றித் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.
- நன்றி நல்லவர்களிடம் நாளும் வாழும்.நன்றி மறப்பது நன்றன்று என்கிறது வள்ளுவம். ஆகவே நன்றி மறவாமையே உயரிய மனிதப் பண்பாகும்.
- அழகுடையவராக இருப்பதினும் நாணமுடையவராக இருப்பதே மேலானது. குலப்பெருமையை விட ஒழுக்கமுடைமையே சிறந்தது.
- சமையலறைக் கழிவுகளிலிருந்து ஒரு தொண்டு நிறுவனம் எரிபொருள் தயாரிக்கிறது. அதற்கான வழிமுறைகளையும் சொல்லித்தருகின்றனர். அதற்கான உபகரணங்களையும் விற்கின்றனர். அவர்களையே அரசு ஆய்வகத்தில் மேலும் ஆய்வுகள் நடத்த வழிவகுக்கலாம். இதை பெரிய அளவில் செயல்படுத்த ஊக்குவிக்கலாம்.

NB edu.newsbundles.com

- பிளாஸ்டின் கழிவுகளுடன் மற்ற பொருள்களையும் கலந்த எரிபொருளாகப் பயன்படுத்துவது பற்றி ஆய்வு செய்யலாம். இவ்வாறான எரிபொருளினால் காற்றில் உண்டாகும் மாசின் அளவு பற்றிய ஆய்வு தேவை.
- பழைய பிளாஸ்க்கிலிருந்து பெட்ரோல் தயாரித்தல் பற்றிய ஆய்வு. இதைப் பற்றிய ஆய்வை முன்பே கல்லூரி மாணவர் செய்துள்ளனர்.
- பண்டைய தமிழக மன்னர்களின் அற உணர்வு, வீரம், கொடை, ஆட்சி சிறப்பு, கல்விப் பெருமை முதலியவறையும் புலவர்களின் பெருமிதம், மக்களுடைய நாகரிகம், பண்பாடு முதலியவறை புறநானூற்றின் மூலம் அறியலாம்.
- சிறுவயதிலிருந்தே மாணவர்கள் நல்ல பழக்க வழக்கங்களையும் பண்புகளையும் பெற்றிருந்தால் சமூகத்தில் நாடும் வீடும் போற்றும் நல்ல குடிமக்களாகப் போற்றப்படுவார்கள்.
- .நீங்கள் இசையில் ஆர்வம் உள்ளவராய் இருந்தால், ஆர்வம் மட்டும் போதாது. நாட்டுப்புற இசை, கர்நாடக சாஸ்திரிய இசை, மேற்கத்திய இசை, மேலும் பல இசைக் கருவிகளைக் கையாளும் திறன் முதலியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். பல மொழிகளின் அறிவும் தேவை. அதற்கு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, கடின உழைப்பு தேவை.
- எல்லா புதிய முயற்சிகளிலும் ஒரு தோல்வி, அவமானம், தடங்கள், நம்பகத்தன்மை போன்ற ரிஸ்க் நிச்சயம் இருக்கும். நாம் நன்றாகத் திட்டமிட்டு எவ்வளவு லாபம் வரும். நஷ்டம் வந்தால் எவ்வளவு வரும் என்று கணக்கிட்டு, காரியத்தில் இறங்கினால் நாம் பயத்திலிருந்து, குழப்பத்தில் இருந்து விடுபடலாம்.
- உலகில் உள்ள அரசனானாலும் ஆண்டியானாலும் எல்லோருக்கும் பொதுவானது என்னவென்று நினைக்கிறீர்கள்? எல்லோருக்கும் பொதுவானது 24 மணி நேரம் ஒரு நாளைக்கு இதில் உறக்கம், சாப்பாடு போன்றவற்றிக்கு சுமார் 10 மணி நேரம் செலவாகும். எஞ்சியுள்ள நேரத்தை எப்படி, எதற்காக செலவழிக்கிறீர்கள் என்பது தான் உங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கும்.
- ஒருவரது வாழ்க்கை என்பது பிறப்பதற்கும் இறப்பதற்கும் இடைப்பட்ட காலம். இந்தக் காலத்தை சரியாக உபயோகப் படுத்த வேண்டும். நேரத்தை செலவிடும் விதத்தைப் பற்றி நீங்கள் கணக்கிட வேண்டும்.

NB edu.newsbundles.com

## எழுதுதல் திறன்

- இயல்பாகத் தோன்றிய தமிழ் மொழியின் உயரிய பண்புகள், தன்மைகள் பற்றி ஒவ்வொரு தமிழனும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.
- எனது பள்ளியில் சுற்றுலா அழைத்துச் சென்றார்கள். நாங்கள் அனைவரும் கொல்லிமலைக்குச் சென்றோம். மரங்களும், எழில் கொஞ்சும் செடிகளும், கொடிகளும் கண்களைக் கவர்ந்தன.
- ஆதவன் தேர்வுக்காக படித்துக் கொண்டு இருக்கிறான். தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெறுவதாகப் பெற்றோரிடம் உறுதி அளித்துள்ளான். இரவில் சீக்கிரமாகப் படுக்கைக்குச் சென்று, காலையில் சீக்கிரமாக படுக்கையினின்று எழுவது மனிதனுக்கு ஆரோக்கியம், செல்வம் அறிவு கிடைக்கும் என்பர்.
- மதிய வேலையில் பலமணி நேரம் உறங்குவதைத் தவிர்க்கவும் அது சோம்பலைத் தரும். பயன்தரும் நேரத்தை வீணாக்குவதைத் தவிர்க்கவும்.
- உணவு உட்கொள்வதிலும் நல்ல பழக்கவழக்கங்களை வைத்துக்கொள்ளுங்கள். தேவையான கலோரி அளவிற்கு மேல் உட்கொள்ளுவதைத் தவிர்க்கவும். வேலை அதிகம் செய்வதால், அதற்கேற்ப அதிக கலோரியான உணவை உட்கொள்ளலாம்.
- குறைந்தது எட்டு டம்ளர் நீராவது குடியுங்கள். கூடுமான வரையிலும் காபி, தேநீர் ஆகியவைகளைத் தவிர்த்து, பால் மோர் ஆகியவற்றை உபயோகிக்கவும்.
- தமிழகத்தின் சிறப்பு மரம் பனை மரமாகும். புன்செய் நில வரப்புகளின் மீது பனை மரங்களை உழவர்கள் வளர்த்தார்கள்.
- பொய் சொல்லாமை என்னும் அறத்தை இடைவிடாமல் கடைபிடித்தால், வேறு எந்த அறங்களையும் செய்ய வேண்டியது இல்லை.
- ஏரி, குளம், வாய்க்கால் முதலியவற்றின் கரைகளின் மீது மண் அரிப்பைத் தடுப்பதற்காகவும் அதன் உறுதி தன்மைக்காகவும் பனை மரங்கள் பெருமளவில் வளர்க்கப்பட்டன.
- இளமையிலேயே துணிச்சலும், வீரமும் கொண்டு விளங்கிய சிறுவன் புலித்தேவன், இந்திய விடுதலைக்கு தென்னகத்திலிருந்து அந்நியரை எதிர்த்த சிறந்த வீரன் ஆவான்.
- வீட்டில் உள்ள பெற்றோர், பெரியோர், உடன் பழகுவோர் ஆகியோரிடமிருந்து பார்த்த பலவற்றை குறிப்பாக நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். பிறர் உரையாடுகின்றபோதோ அல்லது பிறரின் உரையாடல்களிலிருந்தோ அதிகமாகக் கற்றுக் கொள்ளலாம்.

NB edu.newsbundles.com

- தொலைக்காட்சியில் வரும் நல்ல செய்திகளின் மூலம் பலவற்றைத் தெரிந்துகொள்ளலாம். குறிப்பாக செய்திகள், வினாவிடை நிகழ்ச்சிகள் டிஸ்கவரி போன்ற தொலைக் காட்சியின் மூலம் ஏராளமானவற்றைக் கற்றுக் கொள்ளலாம்.

- கழிவு நீர்களிலுள்ள திடக்கழிவுகளை நீர்மைப்படுத்துவது பற்றிய ஆய்வு. அவ்வாறு நீர்மைப்படுத்திவிட்டால் அதனை தோட்டங்களுக்குப் பாய்ச்சலாம். நீர்மைப்படுத்துவதில் குதிரைச்சாணம் தற்போது முதலிடம் வகிக்கிறது.

## எட்டாம் வகுப்பு

### வாசித்தல் திறன்

- பட்டு என்பது பட்டுப்பூச்சியிடமிருந்து பெறப்படும் இயற்கை இழையாகும். பட்டுப் புழுக்களின் உமிழ்நீர்ச் சுரப்பிகளில் சுரக்கப்படும் புரதப் பொருளே பட்டு இழையாகும். பட்டுத் துணிகளை முதலில் உருவாக்கியவர்கள் பண்டைய சீனர்கள் ஆவர். தூயபட்டு என்பது பட்டுப் பூச்சியிடமிருந்து கிடைக்கும் மிருதுவான இயற்கை இழையாகும்.

- பாவேந்தர் பாரதிதாசன் தம் வாழ்நாள் முழுவதனையும், தமிழின் மறுமலர்ச்சிக்காகவும் வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் புத்தெழுச்சி காண்பதற்காகவும், தமிழரின் முன்னேற்றத்துக்குத் தடைக் கற்களாய் நிற்கும் அறியாமையை, மூட பழக்க வழக்கங்களை உடைத்தெறிவதற்காகவும் பாடுபட்டார்.

- பண்டைக்காலத்தில் அரசன் போர் செய்யக் கருதியவுடன், அவனது போர்ப்பறை முழங்கும். அப்பறையின் ஓசை நாற்றிசையையும் அதிரச் செய்யும். அவ்வோசையைக் கேட்ட போர்வீரர்கள் போர்க்கோலம் பூண்டு மிக்க ஆர்வத்தோடு போருக்குப் புறப்படுவார்கள்.

- பாரதிதாசன் அறியாமை இருளில் முடங்கிக் கிடந்தவர்களைப் பகுத்தறிவு ஒளிபெற்று விழிப்புறச் செய்தார். கொள்கையற்றவர்களைக் கொள்கை உரம்பெற்று நிமிர்ந்து நிற்கச் செய்தார்.

- ஒருமுறை திருக்கோட்டியூரில் பெருமாள் கோவிலுக்கு எதிரிலிருந்து மண்டபத்தில் யாருமறியாமல் தங்கியிருந்தார் மருதுபாண்டி. அவருடைய வலக்கையில் ஒரு பெரியகட்டி

NB edu.newsbundles.com

ஏற்பட்டு அதனால் துன்பப்பட்டார். அச்சமயம் பகைவர் சிலர், அவரை சிறைபிடிக்க முயற்சி செய்தனர். செய்தியறிந்ததும் அவருடைய கண்கள் சிவந்தன.

- இத்தாலி நாட்டில் பிறந்த வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டண்டின் ஜோஸப் பெஸ்கி. இவர் தமது முப்பதாம் அகவையில் சமயத் திருப்பணியாற்ற தமிழகத்திற்கு வந்தார்.

- ஆறுமுக நாவலரே முதன் முதலில் இலக்கண வழுவற்ற தூய்மையான, எளிய தமிழ் உரைநடையைக் கையாண்டார். இவ்வாறு தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியவர் ஆறுமுக நாவலர். இவரை வசனநடை கைவந்த வள்ளலார் என பரிதிமாற் கலைஞர் பாராட்டினார்.

- நம் நாட்டின் மதங்கள் பல உயிரினங்களைப் போற்றுவதையும், பாதுகாப்பதையும் போதிக்கின்றன. அவற்றில் சில நமக்கு நேரடிப் பயனளிப்பவையாக இல்லாதபோதும் அவைகளை முற்றும் அழித்துவிடும் அளவுக்குத் தீமை செய்ய நமக்கு சற்றும் உரிமையில்லை.

- உயிரியப் பல்வகைமை நமது உணவு, நீர், ஆக்சிஜன், கழிவு நீக்கம் இவ்வாறு பல உயிர்காக்கும் பயன்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. இயற்கை அழகை ரசிப்பது தமக்கு மகிழ்ச்சியையும் சுகத்தையும் நல்குகிறது.

- நீங்கள் வாழ்க்கையில் முன்னேற விரும்பினால், உங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தும் பேச்சாற்றல், எழுத்தாற்றல் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். உலகில் மக்களிடையே பெரிய சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் எல்லோருமே, சிறந்த எழுத்தாளர்களாகவும், பேச்சாற்றல் மிகவும் உள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள்.
- ஆரம்ப காலங்களில் வாழ்க்கையில் தோல்விகளையும் தடைகளையும் அவமானங்களையும் சந்திக்காமல் முன்னேறியவர்கள் கிடையாது. வெற்றி பெற்றவர்கள் என்பவர்கள் தன் தோல்வியை ஆராய்ந்து, தோல்விக்கான காரணங்களை, நிவர்த்தி செய்து மறுபடி ஆரம்பித்து வெற்றி பெற்றவர்கள்தான்.
- நீங்கள் எதை அடைய வேண்டும் என்று விரும்பினாலும் அதற்கு உங்கள் உடம்பு ஒத்துப் போக வேண்டும், உடல் ஆரோக்கியம் இல்லையென்றால் உங்கள் சிந்தனை, உங்கள் உடம்பைப்பற்றியும் நோயைப்பற்றியும் தான் இருக்கும்.

NB edu.newsbundles.com

## எழுதுதல் திறன்

- வீடெல்லாம், நாடெல்லாம் மக்களின் இதயக்கூடெல்லாம், ஏடெல்லாம் இன்பத்தமிழ் மணக்கவேண்டும் என்று அல்லும் பகலும் அயராது தமிழ்ப்பணி ஆற்றினார்.
- முகம் மதியம் போன்று விளங்கும் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொண்டேன் எனச் சிலேடையாகக் கூற, நண்பர் கவியரசுவின் சொல்லாடலைக் கேட்டு இன்புற்றார்.
- தலைப்புச் செய்தி, முகப்புச் செய்தி, உடல் பகுதிச் செய்தி என மூன்று பகுதிகள் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் செம்மையாக அமைந்தால் தான் செய்தி முழுமை பெற்றதாகச் செய்தித்தாளில் அமையும்.
- நிலத்தில் விளையும் பயிர்கள் பருவ மழையை நம்பியே இருக்கும். நிலத்தில் கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சாமை, அவரை, கொள்ளு, காராமணி ஆகிய பயிர்கள் விளையும்.
- செந்தமிழ் ஒரு பூந்தோட்டம். அப்பூந்தோட்டத்தில் அன்று மலர்ந்த மலர்கள் மணம் பரப்பி வருகின்றன. அம்மலர்கள் செடியிலோ கொடியிலோ பூத்தவை அல்ல. வண்ணம், வடிவம், அளவு, மணம் ஆகியவற்றால் ஒன்றுபட்டவையும் அல்ல.
- காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள நகரம் திருச்சிராப்பள்ளி. இந்நகரம் கோவில்களும், நினைவுச் சின்னங்களும் நிறைந்துள்ள வரலாற்று நகரமாகும். இதன் பழம்பெருமை சான்றாக திகழ்வது மலைக்கோட்டை.
- விற்பனை அங்காடிகளில் ஆடை மாற்றும் அறைகளில் உளவு நிழற்படக் கருவி பொருத்தப்பட்டிருக்கலாம். உங்கள் அலைபேசியை இயக்கி பார்த்தால் ஒரு வித தடுப்பு ஒலி நமக்கு கேட்கும். அப்படி கேட்டால் அவ்வறையில் எங்கோ சிறுதுளையில் உளவு நிழற்படக் கருவி இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணருங்கள்.
- நாம் நாள்தோறும் பார்க்கின்ற, படிக்கின்ற செய்தித் தாள்கள் அன்று மலர்ந்த் மலர்களாக, புத்தம் புதிய செய்திகளோடு கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் வெளிவருகின்றன. உலகில் எங்கோ ஓரிடத்தில் நடைபெறும் சிறிய நிகழ்வும் செய்தியாகிறது.
- மக்களுக்கு ஒழுக்க வரம்பு தேவையானதுபோலவே மொழிக்கு இலக்கணவரம்பும் சொற்களுக்குத் திருந்திய வடிவும் இன்றியமையாதன. இவற்றைத் தமிழில் உள்ளதுபோல்இ வேறு எம்மொழியிலும் காண இயலாது. ஆதனாலேயே தமிழ் செந்தமிழ் எனப்பட்டது.

NB edu.newsbundles.com

- தோல்விக்குக் காரணம் கண்டுபிடித்து விட்டாடல் தீர்வு காண்பது எளிது எந்தப் பிரச்சினையையும் உணர்ச்சி பூர்வமாக பார்க்காதீர்கள், தோல்விக்குக் காரணம் ஆராயும்போது மற்றவர்களின் மீது காரணம் சொல்வதை தவிருங்கள். பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்.
- தவறு உங்கள் மீது இருந்தால் ஒப்புக் கொள்ளுங்கள் நிச்சயம் திருத்திக் கொள்ளலாம். தவறு செய்யாதவர்கள் கிடையாது. திருத்திக் கொள்ளாதவர்கள்தான் அதிகம். வாழ்க்கையில் தோல்வியுற்றவர்களை காரணம் கேட்டுப் பாருங்கள், நிச்சயம் அவர்கள் யார் யாரையோ குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள். தன் தவறை ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.